# ஒழுக்கவியலின் அடிப்படையில் கருச்சிதைப்பு - இலங்கையை மையமாகக் கொண்ட ஆய்வு

**ந.பிரகீஸ்**
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## ஆய்வு அறிமுகம்

அறிவின் மீதான ஆர்வம் கொண்டு அனைத்து துறைகளிலும் ஊடுருவி நெறிப்படுத்தும் நெறியாழ்கையான மெய்யியல் விஞ்ஞானத்தின் தாய் என போற்றப்படுகின்றது. இம் மெய்யியல் தன்னுள் எண்ணிலடங்கா எத்தனையோ துறைகள் தொடர்பாக ஆராய்கின்ற அதேவேளை மக்கள் சார்பான அபிவிருத்திகளிலும் முக்கிய பங்காற்றுகிறது இவ்வகையில் மெய்யியல் நுணுகி ஆராய்கின்ற துறைகளில் ஒன்றாக ஒழுக்கவியல் காணப்படுகின்றது.

“Ethics” என ஆங்கிலத்தில் பெயர் வழங்கப்படுகின்ற ஒழுக்கவியலானது குணப்பண்புகள் எனும் அர்த்தத்தினை வெளிப்படுத்தும் கிரேக்கச் சொல்லான “Ethos” என்னும் அடிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். இத்தகைய ஒழுக்கவியல் மனித செயல்கள் மற்றும் மனித நடத்தையின் தரத்தினைப்பற்றி ஆய்வு செய்கின்ற அதேவேளை மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகள் யாவும் சரியானதா?, தவறானதா?, நல்லனவா? அல்லது தீயனவா? என்பதனை எடுத்துக் கூறுவதுடன் மானிடத் தொடர்புடய ஒவ்வொரு துறையையும் விமர்சித்து அத்துறைகளை ஒழுக்க ரீதியில் வழி நடாத்திச் செல்கின்றது.

இத்தகைய ஒழுக்கவியல் பல மனித சார் துறைகளை ஆராய்கின்ற அதேவேளை இன்றைய உலகில் பரவலாக நடைபெறும் ஒழுக்கமுறைச் செயலான கருக்கலைப்பு அல்லது கருச்சிதைப்பு எனும் எண்ணக்கரு தொடர்பாக கவனம் செலுத்துகிறது. ஆணின் விந்தணுவிலிருந்து பெண்ணின் சூல் முட்டையில் முளையமாக கர்ப்பப் பையில் தங்கியிருக்கும் முளையத்தினை அல்லது முதிர்கருவினை உயிர்வாழக்கூடிய தன்மையை அடைவதற்கு முன் கர்ப்பப்பையில் இருந்து அகற்றி அழித்து விடுதல் கருக்கலைப்பு அல்லது கருச்சிதைப்பு எனப்படுகின்றது .இத்தகைய கருக்கலைப்பானது உயிர்க்கொலையினை ஆதாரமாகக் கொண்டு ஒழுக்கவியலானது தனது ஆய்வினை மேற்கொள்கிறது. கருக்கலைப்பு தொடர்பான சட்டங்களும், பண்பாட்டு நோக்குகளும் உலகம் முழுவதிலும் பெருமளவுக்கு வேறுபடுகின்றன. கருக்கலைப்புக்கு ஆதரவானவர்களுக்கும், எதிரானவர்களுக்கும் இடையிலான விவாதங்கள் உலகம் முழுதும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றன. கருக்கலைப்புக்கு எதிரானவர்கள் கருவோ, முளையமோ, முதிர்கருவோ மனித உயிருக்குச் சமமானது என்றும், அதனை அழிப்பது கொலைக்குச் சமமானது என்றும் வாதிடுகின்ற அதேவேளை கருவை வளரவிடுவதும், அழிப்பதும் அதனைச் சுமக்கும் பெண்ணின் உரிமை என்று கருக்கலைப்பிற்கு ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர்.

கருக்கலைப்பு தொடர்பான எண்ணக்கருவினை விளக்குவது தொடர்பாகவும் கருக்கலைப்பானது ஒழுக்கவியல் ரீதியில் எவ்வாறு நோக்கப்படுகின்றது என்றும் இலங்கையில் கருக்கலைப்பு எத்தகைய தன்மையில் காணப்படுகிறது என்பது தொடர்பாகவும் விளக்குவதாக இவ் ஆய்வு காணப்படுகின்றது.

## ஆய்வு நோக்கம்

ஒழுக்கவியல் ஆய்வு செய்யும் முக்கிய துறைகளில் ஒன்றாக விளங்குகின்ற கருச்சிதைப்பானது ஆரம்ப காலம் முதல் இன்றைய காலம் வரை மேற்கொள்ளப்பட்டவாறே காணப்படுகின்றது. கருச்சிதைவு தொடர்பான எண்ணக்கருவினை விளக்குவதனடிப்படையிலும் உயிர்க்கொலை என்பதன்

அடிப்படையிலும் கருக்கலைப்பானது ஓர் ஒழுக்க மீறுகைச் செயல்பாடுகள் எனவும், இலங்கையைப் பொறுத்தவரையில் கருக்கலைப்பது எத்தகைய தன்மையினை பெற்று நிற்கின்றது என்பது தொடர்பிலும் வெளிப்படுத்தும் நோக்கினை மையப்படுத்தி இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வு பிரச்சினை

- ஒழுக்கவியலின் கருக்கலைப்பு எவ்வாறு நோக்கப்படுகிறது?
- கருக்கலைப்பின் காரணங்கள் என்ன?
- எத்தகைய வழிமுறைகளில் கருக்கலைப்பு மேற்கொள்ளப்படுகிறது?
- இலங்கையில் கருக்கலைப்பின் வகிபாகம் எத்தகையது?

## ஆய்வு கருதுகோள்

கருச்சிதைப்பானது பலதரப்பட்ட காரணங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்கின்றது இதில் இலங்கையும் ஒழுக்கவியல் பார்வையில் விமர்சிக்கப்படுகிறது.

## ஆய்வு முறையியல்

எந்த ஒரு ஆய்வினை மேற்கொள்கின்ற போதும் குறித்த ஆய்வினை மேற்கொள்ள ஆய்வு முறையியலானது இன்றியமையாத ஒன்றாக காணப்படுகின்றது. இவ் ஆய்விற்கான தரவுகளும், தகவல்களும் இரண்டாம், மூன்றாம் நிலைத்தரவுகள் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், இணையத்தளம் மூலம் பெறப்பட்ட தரவுகள், அறிக்கைகள், புள்ளிவிபரங்கள் முதலியவை தொகுத்து ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

## ஒழுக்கவியல் பற்றிய நோக்கு

மனிதன் தோன்றிய ஆரம்ப யுகம் முதற்கொண்டு தன் உணவுகளின் தேவைகள் மற்றும் அத்தியாவசிய தேவைகள் போன்ற அனைத்திற்காகவும் மிருகங்களையும் தாவரங்களையும் கொன்று குவித்தான் இத்தகைய செயலானது பாவச் செயல் என்றும் தர்மத்திற்கு எதிரான செயல் என்றும் மனிதன் அறிந்து அவற்றினை கொல்லாமல் தாவர உணவிற்கு தன்னை பழக்கப்படுத்தி விவசாயச் செய்கையினை மேற்கொண்டு தன்னை பாவச் செயல்களிலிருந்து விடுவித்துக்கொண்ட காலம் முதலே ஒழுக்கவியல் தோற்றம் பெற்றது எனலாம்

எனினும் “நல்லறிவே நல்லொழுக்கம் நல்லொழுக்கமே நல்லறிவு” என சமூகத்திற்கு எடுத்தியம்பிய கிரேக்க காலத்தின் தத்துவஞானியான சோக்ரடீஸ் ஒழுக்கவியலின் தந்தை என போற்றப்படுகிறார். Ethics என ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்ற ஒழுக்கவியல் எனும் சொல் கிரேக்க மொழிச் சொல்லான Ethos எனும் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும் இது வழக்கம் அல்லது சம்பிரதாயம் என்பதனை சுட்டி நிற்கின்றது.

பொதுவாக ஒழுக்கமானது இனம், மதம், நாடு, மக்கள், கலாசாரம் என்பனவற்றிற்கேற்ப மாறுபடுகின்ற ஒரு மரபாகக் காணப்படுகின்றது. சீரான மனித நடத்தைக்கும், செம்மையான மனித வாழ்விற்கும் ஆதாரமான அடிப்படை நெறிகளுள் ஒன்றாக ஒழுக்கவியல் அமைந்துள்ளது. வாழ்க்கையின் இயல்புகளையும், பிரச்சினைகளையும் மனிதன் ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கிய போது தோன்றிய ஒழுக்கவியலானது நன்மை தீமை, சரி, பிழை போன்ற சிந்தனைகளில் இருந்து வளர்ச்சி பெறத்

தொடங்கியுள்ளது. ஒழுக்கவியலானது மனித செயல்கள் மற்றும் நடத்தையின் தரத்தைப் பற்றி ஆய்வு செய்கின்ற துறையாகக் காணப்படுகின்றது. ஒழுக்கவியலின்படி மனித செயல்கள் ஒவ்வொன்றும் அது ஆற்றும் நோக்கம், முடிவு பற்றி மட்டுமன்றி ஏனைய முடிவுகளை அடைய அது எவ்வாறு உதவும் என்ற வகையிலும் ஒழுக்கக் கண்ணோட்டத்தில் ஆராய்கின்றது. எனவே ஒழுக்கவியலின் அடிப்படைகள் சமுதாயத்தைப் பாதிக்கக் கூடிய தனி மனிதனின் நடத்தையை ஆய்வு செய்கின்றது எனலாம்.

ஒழுக்கவியலானது மனித நடத்தை பற்றி ஆய்வு செய்யும் ஒரு நடத்தை விஞ்ஞானமாகக் காணப்பட்டாலும் ஏனைய நடத்தை விஞ்ஞானங்களான உளவியல், அரசியல், சமூகவியல் போன்றனவற்றில் இருந்து வேறுபடுகின்றது. ஏனெனில் மேற்படி விஞ்ஞானங்கள் ஆய்வு முடிவுகளை உள்ளதை உள்ளவாறு விளக்கும் வகையில் காணப்படுகின்றன. ஆனால் ஒழுக்கவியலானது உள்ளதை உள்ளவாறு கூறாமல் நியமத்தின் அடிப்படையில் ஆய்வு முடிவுகளை வெளிப்படுத்துகின்றன. இதனால் ஒழுக்கவியல் நியம விஞ்ஞான வகைக்குள்ளும் உள்ளீர்க்கப்படுகின்றது.

இத்தகைய ஒழுக்கவியலானது எத்தனையோ விடயங்களை நியமம் சார்பாக நெறிப்படுத்துகின்ற அதே வேளை அத்துறைசார்பாக விமர்சிக்கவும் செய்கின்றது. இதனடிப்படையில் கருச்சிதைப்பு அல்லது கருக்கலைப்பு தொடர்பாகவும் தனது விமர்சனப்பார்வையினை செலுத்துகின்றது.

## கருக்கலைப்பு அல்லது கருச்சிதைப்பு

முளையம் (Embryo) அல்லது முதிர்கரு (Fetus) உயிர்வாழக் கூடிய தன்மையை அடைவதற்கு முன்னர், அதனை கருப்பையிலிருந்து அகற்றி அதனை அழித்துவிடுதல் கருக்கலைப்பு (Abortion) எனப்படுகின்றது. இக் கருக்கலைப்பானது பொதுக் கருச்சிதைவு மற்றும் தூண்டற் கருக்கலைப்பு என வகைப்படுத்தப்படுகிறது. சில சமயங்களில் தானாகவே முளையம் அல்லது முதிர்கரு கருப்பையின் உள்ளே இருக்கும்போது அழிந்துவிடுகின்றது. அவ்வாறு நிகழுமாயின், அது பொதுக் கருச்சிதைவு (Spontaneous Abortion) எனப்படும். தானாக அன்றி, ஒரு நோக்கோடு செய்யப்படும் கருக்கலைப்பு தூண்டற் கருக்கலைப்பு (Induced abortion) எனப்படுகிறது. கருக்கலைப்பு என்ற சொல், வேண்டுமென்றே செய்யப்படும் தூண்டற் கருக்கலைப்பையே குறிக்கிறது. இத் தூண்டல் கருக்கலைப்பானது சிகிச்சைக் கருக்கலைப்பு மற்றும் தேர்வுக் கருக்கலைப்பு என வகைப்படுத்தப்படுகின்றது. தாயின் நலம் கருதி மேற்கொள்ளப்படும் கருக்கலைப்பு சிகிச்சைக் கருக்கலைப்பு எனவும். பிற காரணங்களுக்காக செய்யப்படும் கருக்கலைப்பு தேர்வுக் கருக்கலைப்பு எனவும் அழைக்கப்படுகின்றது. பொதுவாக குழந்தை பெற்றுக் கொள்வதை தள்ளிப் போடவோ, அல்லது குழந்தை பெற்றுக் கொள்வதை நிறுத்துவதற்காகவோ, வேலையில் ஏற்படும் குழப்பங்கள், படிப்பில் ஏற்படக் கூடிய இடைஞ்சல்கள், நிரந்தரமற்ற பொருளாதார நிலை, உறவுகளில் உறுதியற்ற தன்மை போன்றனவே தூண்டற் கருக்கலைப்புக்கு காரணமாகின்றன ஒரு பெண் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டபோது கர்ப்பம் தரித்திருந்தாலும், இவ்வாறான கருக்கலைப்பு செய்யப்படுகிறது.

மேலும் உலக வரலாற்றில் கருக்கலைப்பானது 2ம் நூற்றாண்டின் கிரீஸ் நகரில் இருந்தே ஆரம்பமாகிறது. பல சித்தாந்தங்களையும், சித்தாந்தவாதிகளையும் தன்னகத்தே கொண்ட நாகரீகத்தின் தொடக்கம் என்றழைக்கப்படும் தொண்மையான கிரீஸ் நகர கிரேக்க வைத்தியர்கள் அக்காலத்தில் ஓர் பெண்ணின் வயிற்றிலுள்ள சிசுவை அழிப்பதற்கு பல கடின வழி முறைகளைக் கையாண்டதாக

வரலாறு கூறுகின்றது. பாய வைத்தல், கடுமையான உடற்பயிற்சிகளை செய்வித்தல் பாரமான பொருட்களை சுமக்க வைத்தல், வேகமாக ஓடும் மிருகங்களோடு சேர்த்து ஓட வைத்தல் போன்றவைகளை ஆரம்ப காலத்தில் கருக்கலைப்பு முறைகளாகக் கையாண்டனர். அதன்பின்னர் சில மூலிகைகளை உண்ணச் செய்வதன் மூலமும், கூரிய ஆயுதங்களைப் பயன்படுத்தியும் கருக்கலைப்பை மேற்கொண்டதாகவும் தெரிய வருகிறது. ஆனால் இன்றைய நாட்களில் மருத்துவத்தின் அசுர வளர்ச்சியினால் கருச்சிசுவை அழிக்க பெரும்பாலும் உறுஞ்சு குழாய் மூலம் வெளியேற்றல் போன்ற வழிமுறைகளே பயன்படுத்தப்படுகின்றன. அதாவது முதல் 15 வாரங்களுக்குள் உள்ள கருச்சிசுவை manual syringes அதாவது ஊசியைப் பயன்படுத்தியும், electrical vacuum வழிமுறையைப் பயன்படுத்தியும், 15 வாரங்களுக்கு மேற்பட்ட கருவை பெரிதாக்கி உறிஞ்சும் முறையை பயன்படுத்தியும் கருக்கலைப்பு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இம்முறைகளைப் பயன்படுத்தி கருக்கலைப்புச் செய்வதற்காக Amniotic fluids எனும் திரவம் பெண்ணின் கருப்பையினுள் ஊசி மூலமாக உட்செலுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இன்னும் மிகவும் தாமதமான கருக்கலைப்புக்களுக்கு சத்திர சிகிச்சை முறையைப் பயன்படுத்தியும் கருச்சிதைவு செய்யப்படுகின்றது. இவ்வாறான முறைகள் உயிருக்கு ஆபத்தளிக்கக் கூடியனவாகவும், பாரதூரமான பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியனவாகவும் காணப்படுகின்றன. இதனோடு சேர்த்து கருக்கலைப்பை சட்டரீதியாக்கக்கூடாது என்பதற்கு இன்னும் பல உறுதியான காரணங்களும் முன்வைக்கப்படுகின்றன.

## மருத்துவத்தில் கருச்சிதைப்பு மேற்கொள்ளப்படுகின்ற முறைகள்

கருச்சிதைப்பானது இன்றைய காலகட்டங்களில் பல முறைகளினூடாக வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனடிப்படையில் நுனிப்பகுதி கூர்மையான, மெல்லிய குழாய் வடிவிலானதொரு உபகரணம் தாயின் கர்ப்பப்பையினுள் செலுத்தப்பட்டு இதனுடன் பலமாக உறிஞ்சி இழுக்கும் வகையில் இயந்திரமொன்று வெளியே பொருத்தப்படும். இது வீடு சுத்தம் செய்யப் பயன்படுத்தும் நவீன இயந்திரமொன்றைவிட 23 மடங்கு உறிஞ்சும் சக்தியில் பலமிக்கது. இவ்வியந்திரத்தை இயங்கச்செய்தவுடன் சிசுவின் உடலுறுப்புகள் யாவும் வேகமாக உறிஞ்சப்பட்டு பகுதி பகுதிகளாகப் பிரித்தெடுக்கப்படும்.

கூர்மையானதோர் உபகரணத்தின் மூலம் இரத்தம் வழியவழிய சிசு உயிருடன் வெட்டி வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்தெடுத்து கருச்சிதைப்பு மேற்கொள்ளப்படுகின்றன,

மயிர்பிடுங்கிபோன்றதொரு உபகரணத்தின்மூலம் சிசுவின் கைகளும் கால்களும் பிடுங்கி எடுக்கப்படும். இவ்வாறு சிசுவின் உடலுறுப்புகளனைத்தும் கர்ப்பப்பையிலிருந்து முழுமையாக நீக்கப்படும். இதன்போது அச்சிசு வேதனையை உணரும் தறுவாயிலேயே இருக்கும். வெளியே எடுத்துப்பார்த்தால் சிசுவின் மண்டையோடு நொறுங்கியிருக்கும், முதுகுப்பகுதி ஒடிந்திருக்கும் இவ்வகையிலும் கருச்சிதைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

தாயின் வயிற்றினூடாக குழந்தையின் இதயத்துக்கு விச ஊசி ஏற்றப்பட்டு கொல்லப்படும். இது இரட்டைக்குழந்தைகள் கருத்தரித்தால் அதில் ஒரு குழந்தையைக் கலைப்பதற்கே பெரும்பாலும் செய்யப்படும். ஆனால் ஒன்றுக்கு ஏற்றப்பட்ட விசம் மற்றைய சிசுவுக்கும் பரவி இரண்டுமே இறக்கும் சாத்தியப்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது.

மேலும் விட்டமீன்களின் செறிவு அதிகமாக காணப்படுகின்ற மாத்திரைகளை வழங்கியும் கருச்சிதைவு மேற்கொள்ளப்படுகின்றன எனினும் இத்தகைய செயல் ஆரம்பகட்ட முளையத்திற்கு மாத்திரமே சாத்தியப்படும். இவ்வாறாக பலதரப்பட்ட வழி முறைகளில் கருச்சிதைவு மேற்கொள்ளப்படுகின்றன.

## உலக நாடுகளில் கருக்கலைப்பு

கருக்கலைப்பு தொடர்பாக சர்வதேசரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளையும் அதன் தரவுகளையும் வைத்து நோக்கும்போது இக்கொடுமைகள், சமூகத்தில் எந்தளவு சர்வசாதாரண மயப்பட்டிருக்கின்றன என்பதனையும் மனிதகுலம் எதிர்நோக்கியிருக்கும் பேராபத்தின் விபரீதத்தன்மைகளையும் விளங்கமுடியும்.

பிரித்தானியாவில் வருடந்தோறும் கருக்கலைப்பு செய்வோர் எண்ணிக்கை 200 ஆயிரத்தை அடைந்துள்ளது. 1967ம் ஆண்டு கருக்கலைப்பானது சட்டபூர்வமாக்கப்பட்டதிலிருந்து பிரித்தானியாவில் 2008ம் ஆண்டுவரை கருக்கலைப்பு செய்தோர் தொகை ஏழு மில்லியன்களாக மாற்றப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு சுமார் 500 கருக்கலைப்புகள் பிரித்தானியாவில் நடைபெறுகின்றன. அமெரிக்காவில் வருடாவருடம் 1.21 மில்லியன் பேர் கருக்கலைப்பு செய்கின்றார்கள், ஒரு நாளைக்கு சுமார் 3700பேர் கருக்கலைப்பிலீடுபடுகின்றனர். 1973ம் ஆண்டு கருக்கலைப்பு சட்ட அங்கீகாரம் பெற்றதிலிருந்து 2005ம் ஆண்டுவரை 45மில்லியன் கருக்கலைப்புகள் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளன.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஐவருக்கு ஒருவர் விகிதம் கருக்கலைப்பு ' செய்கின்றனர். அதாவது ஒவ்வொரு 27 வினாடிக்கும் ஒருமுறை கருக்கலைப்பு செய்யப்படுகின்றது. 2005ம் ஆண்டில் மட்டும் ஐரோப்பிய நாடுகளில் 5.4 மில்லியன் கருக்கலைப்புகள் செய்யப்பட்டுள்ன. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் “மால்தா, லக்ஸம்பேர்” போன்ற நாடுகளின் சனத்தொகையிலும் அதிகமாயுள்ளது.

இந்தியாவில் சிசுக்கொலை என்பதைவிட பெண்சிசுக்கொலையே அதிகமாகச் செய்யப்படுகின்றது. இந்தியாவில் தலைவிரித்தாடும் வரதட்சனைக் கொடுமையால் பெருமளவில் பெண் சிசுக்கொலைகளே புரியப்படுகின்றன, “அமினோ சென்டிஸிஸ் (Amino Centesis) என்ற தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி கரு ஆணா அல்லது பெண்ணா என்பதையறிந்து, பெண்ணாக இருந்தால் கருவறையில் வைத்தே அச் சிசு கொலைசெய்யப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் மாத்திரம் பத்து இலட்சம் பெண்சிசுக்கள் கருவறுக்கப்படுகின்றன. அதாவது தினமும் 2500 சிசுக்கள் அழிக்கப்படுகின்றன, 2007ம் ஆண்டு பொருளாதார ஆய்வுகளின் படி பிறக்கும் 1 இலட்சம் குழந்தைகளில் பெண் சிசுக்கொலை விகிதம் 450ஆக உள்ளது. இது சீனாவில் 45 விகிதமாகவும் இலங்கையில் 58 விகிதமாகவும் காணப்படுகின்றது.

இவைதொடர்பாக ஒரு மொத்தப் பார்வை பார்த்தால் வருடம்தோறும் உலகளவில் 45 மில்லியன் கருக்கலைப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன, அவற்றில் 20 மில்லியன் கலைப்புகள் சட்டவிரோதமானவை, ஒரு நாளைக்கு சுமார் 115000 கருக்கலைப்புகள் உலகளவில் நடக்கின்றன, பெரும்பாலான கருக்கலைப்புகள் வளர்முக நாடுகளிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் ஒரு மணிநேரத்திற்கு ஒருதரம் எட்டு கர்ப்பிணிப் பெண்கள் இறக்கின்றனர். 2005ம் ஆண்டில் மாத்திரம் 85000 கர்ப்பிணிப் பெண்கள் இறந்துள்ளனர். சுமார் 5.2 மில்லியன் பேர் இந்தக் கருக்கலைப்பின் அதீத அதிகரிப்பினால் வருடம்தோறும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர்.

## இலங்கையில் கருச்சிதைப்புப் பற்றிய நோக்கு

இலங்கையில் வருடாந்தம் நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கர்ப்பம் தரிக்கும் போது நாளாந்தம் ஏறத்தாள 658ம் மேற்பட்ட கருக்கலைப்பு இடம்பெறுவதாக அறியப்படுகிறது. அதாவது வருடாந்தம் கிட்டத்தட்ட 250170 சட்டவிரோத கருக்கலைப்புகள் மேற்கொள்ளட்டுவருகின்றன. சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தகவல்களின் படி கருக்கலைப்பு செய்து கொள்வோரில் ஏறத்தாள 24,000

பேர் குறைந்த வயதுடைய சிறுமிகள் என்றும் தெரிவித்துள்ளது. இவர்களில் அதிகமானோர் குருநாகல், தம்புள்ள போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே அதிகம் என்றும் அறியப்படுகிறது.

குடும்ப சுகாதார செயலகத்தினால் 2012 வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இலங்கையில் மரணமுறும் கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கையில் 13வீதமானோர் பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் மரணமுறுபவர்கள் என்று தெரிவித்திருந்தது.

இலங்கையில் கருக்கலைப்புக்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும், மோசமான முறைகளாலும் கர்ப்பமுறுவதை நிரந்தரமாக பாதிக்கச் செய்த சம்பவங்களும், பயன்படுத்தப்பட்ட கருவிகளால் வேறு நோய்களுக்கு ஆளாகிய சம்வங்களும் கூட இதற்கு முன்னர் பதிவாக்கியிருக்கின்றன. உள்ளே ஏற்பட்ட காயங்களால் புற்றுநோய்க்கான எச்சரிக்கையும் கூட செய்யப்பட்டிருக்கின்றன. 1883ம் ஆண்டின் இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின்படி (Penal Code of Sri Lanka) கருக்கலைப்பு சட்டவிரோதமானதும், தண்டனைக்குரியதுமான ஒரு குற்றமாகும். இலங்கை தண்டனைச் சட்டம் உறுப்புரை 303ன் படி, ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தைத் தவிர்த்து வேறு எந்தக் காரணத்திற்காகவும் கருவைச் சிதைத்தல் தண்டனைக்குரிய குற்றம். இக் குற்றத்திற்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் என குறிப்பிடப்பட்டது. மேலும், பெண்ணானவள் கருவுறும் நிலையில் கருச்சிதைவு செய்தால் 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும். மேலும், பெண்ணானவர் தனக்குத் தானே கருச்சிதைவு செய்து கொள்வதும் இப்பிரிவின் கீழ் குற்றமாகும். இன்னும் தண்டனைச் சட்டக் கோவை உறுப்புரை 304ன் படி, ஒரு பெண்ணின் சம்மதத்தைப் பெறாமல் அவருக்கு கருக்கலைப்புச் செய்தால் 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் வழங்கப்படும். மேலும் தண்டனைச் சட்டக் கோவை உறுப்புரை 305ன் படி, கருவை சிதைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படும் போது குறித்த அப்பெண்ணுக்கு மரணம் சம்பவித்தால் அதற்குக் காரணமானவருக்கு அதே 20 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அபராதமும் தண்டனையாக வழங்கப்படும்.

இலங்கை ஓர் பல்லின சமூகத்தையும், கலாச்சாரத்தையும் கொண்ட நாடு. தொன்று தொட்டு நாம் எமக்கேயுரிய பாரம்பரியங்களையும், சம்பிரதாயங்களையும் கொண்டுள்ள அதேவேளை இந்நாட்டில் பின்பற்றப்படும் எந்த மதமும் கருக்கலைப்பை ஆதரிக்கவில்லை. எனவே கருக்கலைப்பை சட்டரீதியாக்குவதன் மூலம் அது நமது கலாச்சார விழுமியங்களை சிதைக்கக்கூடும்.

மேலும் பாதுகாப்பற்றதும், சட்டவிரோதமுமான கருக்கலைப்புக்கள் ஆசியாவில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே பெரும்பாலும் நடைபெறுவதாக சுட்டிக் காட்டப்படுகிறது. இன்னும் திருமணமான பெண்கள் கருக்கலைப்பை ஓர் குடும்பக் கட்டுப்பாட்டு முறையாகவே கருதுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் இவ்விடயம் தொடர்பில் போதிய அறிவின்மையாகும். எமது சமூக, கலாசார அம்சங்கள் காரணமாக பாடசாலை மட்டங்களில் கூட இவ்வாறான விடயங்கள் பற்றி போதிக்கப்படுவதில்லை. சமுதாய மட்டத்திலும் இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மிகக் குறைவாகவே முன்னெடுக்கப்படுகின்றன. இதன் காரணமாக பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களில் ஈடுபடுவதன் மூலம் பெண்கள் குறுகிய கால மற்றும் நீண்ட கால உடல், உளப் பாதிப்புக்களுக்கு உள்ளாகின்றனர். பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்களினால் சில சமயம் குழந்தை சிதையாமல் பிறக்கக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு. ஆனால் அவ்வாறு பிரசவிக்கும் குழந்தைகள் பெரும்பாலும் உள்ளுறுப்புக்களில் பாதிப்பைக் கொண்டோ, அல்லது மூளை வளர்ச்சி குறைந்ததாகவோ

பிறக்கின்றன. மேலும் மார்புப் புற்று நோய், மன உளைச்சல் போன்ற நோய்களுக்கும் பெண்கள் உள்ளாகலாம். இன்னும் சட்ட விரோதக் கருக்கலைப்புக்களில் ஈடுபடுவோரில் 50 சதவீதத்திற்கும் கூடுதலானவர்கள் போதிய பயிற்சியளிக்கப்பட்டவர்களாக இருக்கவில்லை. இலங்கையில் ஓர் சட்ட விரோதக் கருக்கலைப்புக்கு 5000 ரூபாவில் தொடங்கி அதற்கு மேலும் வசூலிக்கப்படுவதாக தெரிய வருகின்றது. 5000ரூபா என்பது இக்காலத்தில் ஒரு சிறு தொகை என்பதால் சட்ட விரோதக் கருக்கலைப்புக்கள் தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமுள்ளன. ஆகவே இவ்வாறான பாதுகாப்பற்ற, உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய கருக்கலைப்புக்களை ஊக்குவிக்கும் வகையில் இலங்கையில் கருக்கலைப்பு சட்டரீதியாக்கப்படக் கூடாது என்பதுடன் இவ்வாறான சட்ட விரோதக் கருக்கலைப்புக்களைத் தடுக்கும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

இது இவ்வாறிருக்க, இலங்கையில் கருக்கலைப்பு சட்டரீதியாக்கப்பட வேண்டுமென்றும் வாதங்கள் உள்ளன. பெண்ணானவள் தனக்கு குழந்தை வேண்டுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரத்தைப் பெற்றவளென்று ஒரு சாரார் வாதிடுகின்றனர். மேலும் வேண்டாத குழந்தையை தத்துக் (Adoption) கொடுப்பதன் மூலம் குழந்தைக்கும் தாயிற்குமான உறவு முடிவடைவதில்லை. அது பல சந்தர்ப்பங்களில் வேண்டாத விளைவுகளை சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்படுத்துகின்றது என்றும் சொல்லப்படுகின்றது. இன்னும் பெண்ணியம் பேசுபவர்கள் கூட எந்த செயலோ, பொருளோ அதற்கு அந்தந்த சமயத்திற்கு ஏற்ற முக்கியத்துவம்தான் வழங்கப்பட வேண்டும். ஓர் தாயின் வயிற்றுக்கரு அதன் ஆரம்ப கால கட்டத்தில் ஒரு புழுப் பூச்சி அளவு கூட உணர்வற்ற வெறும் திசுக் கூட்டம். அதற்காக பெண் வாழ்நாள் முழுவதும் சிலுவை சுமக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் வாதிடுகின்றனர். மேலும் பல மேலைத்தேய நாடுகளும் கருக்கலைப்பை சட்டரீதியாக்கியுள்ளன என்றும் சுட்டிக் காட்டுகின்றனர்.

இது தவிர்ந்த நடு நிலைவாதிகள் கருக்கலைப்பு சட்டரீதியாக்கப்படக் கூடாது ஆனால் சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கருக்கலைப்பு செய்து கொள்ளும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமென்றும் வாதிடுகின்றனர். 18 வயதுக்குக் குறைந்த சிறு பெண் வன்முறைக்குட்பட்டு (Rape) தாயாகுதல் மற்றும் ஒரு பெண் நெருங்கிய உறவினர்களால் தாயாகுதல் (Incest) இது போன்ற சந்தர்ப்பங்களில் கருக்கலைப்புச் செய்வதற்கு சட்ட ரீதியாக அனுமதியளிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்படுகின்றது. மேலும் 1973ம் ஆண்டு கருக்கலைப்புச் சட்டத்தை (Adoption Law) ஆராய்ந்த இலங்கை மருத்துவ சட்ட சமூக ஆலோசனை சபை (Committee of the Medical Legal Society in Sri Lanka) இலங்கையின் கருக்கலைப்புச் சட்டம் நடு நிலையானதாக அமைய வேண்டுமெனவும், தாயினுடைய வாழ்வைப் பாதுகாப்பதற்கும், உடல், உள ரீதியில் பெண்ணானவள் பாதிக்கப்படாதிருக்கவும், குழந்தை அங்கவீனமாகவோ அல்லது மூளை வளர்ச்சி குறைந்ததாகவோ பிறக்கும் என்பதை மருத்துவ பரிசோதனை மூலம் கண்டறிந்தாலும் கருக்கலைப்பு செய்து கொள்ள சட்டத்தால் அனுமதியளிக்கப்பட வேண்டுமென்றும் சிபாரிசு செய்திருந்தது.

முடிவாக, இலங்கையில் சட்ட விரோத கருக்கலைப்புக்கள் தொடர்ச்சியாக அதிகரித்த வண்ணமுள்ளன. இதற்காக மக்கள் பெரும்பாலும் தகுதியற்ற மருத்துவர்களையே நாடிச் செல்கின்றனர். தற்போது கருக்கலைப்பு பற்றி நடைமுறையிலுள்ள சட்டம் 200 ஆண்டுகள் வரை பழைமை வாய்ந்ததாகும். இருப்பினும் 1995ம் ஆண்டு கருக்கலைப்பு தொடர்பாக கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டிருந்தமை இலங்கை மக்கள் இத்தகைய சட்டத் திருத்தத்தில் கொண்டிருக்கும் அதிருப்தியை தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது.

கருக்கலைப்பானது பாதிக்கப்பட்டவருக்கான ஒரு சிறந்த தீர்வாகவும், அதே சமயம் குறைப் பிறப்புக்களைத் தவிர்க்கும் வகையில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் பெண் என்பவள் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நெறிமுறைகளுடன் வாழ வேண்டியது அவசியமாகும். தவறும் பட்சத்தில் அவள் அதற்கான முழுப் பொறுப்பையும், விளைவையும் அனுபவிக்கவும் தயாராக இருத்தல் வேண்டும். இருப்பினும் பெண்கள் மீதான சமகால வன்முறைகள் அதிகரித்துள்ளதால் சட்டத்தில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டிய தேவை தவிர்க்க முடியாததும் யதார்த்தமானதுமாகும். இத்தகைய நிலையில் இலங்கையின் கருச்சிதைப்பு நோக்குபற்றி அறிய முடிகின்றது.

## முடிவுரை

கருச்சிதைப்பானது பலதரப்பட்ட காரணங்களால் மேற்கொள்ளப்படுகின்றன எனினும் தகுந்த காரணங்கள் பொருத்தமுடையது எனின் கருச்சிதைப்பும் ஏற்புடையதாகக் காணப்படும். கரு எனும் நோக்கில் நோக்குகின்றபோது அது உயிருள்ள ஒரு ஜீவனே. கொலை எத்தகயதோர் குற்றமோ அது போலவே கருச்சிதைப்பும் ஓர் கொலைக் குற்றமாகும். சமூக நோக்கிலும் சரி சமய நோக்கிலும் சரி ஒழுக்கவியலினூடாக பார்க்கப்படுகின்ற போது கருச்சிதைப்பென்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றே இலங்கையினைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை கருச்சிதைவானது தொடர்ந்தும் அதிகரித்தவண்ணமாகவே காணப்படுகின்றது. இதற்கான தெழிவான காரணம் சட்டத்திலுள்ள நலிவு நிலையே. எனவே கருச்சிதைப்பு என்பதனை ஒழுக்கத் தன்மையுடன் நோக்கி கொலைகளுக்கு இடமளிக்காமல் புதிய தலைமுறையினை பெருமிதத்துடன் வரவேற்போம்

## உசாத்துணை நூல்கள்


1. கலாநிதி ஜமாஹிர்.பீ.எம், 2012, “ஒழுக்கவியல் ஓர் அறிமுகம்”, ஈஸ்ரன் புத்தகாலயம்.
2. சிவானந்த மூர்த்தி.க, 2012, “ஒழுக்க நியமங்களும் அதன் நடைமுறைகளும்”, லங்கா புத்தக சாலை.
3. சிவானந்த மூர்த்தி கனகசபை, 1998, “மெய்யியல்”, அம்பாள் வெளியீட்டகம்
4. http://www.vakeesam.com/?p=2104
5. https://www.namathumalayagam.com/2017/09/blog-post_16.html
6. https://vedathiyanam.blogspot.com/2016/12/abortion.html
7. http://ta.vikaspedia.in/health
8. https://uyirkkural.wordpress.com/2017/04/16/